பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
21 10 2024 7 15

தலைப்புச் செய்திகள்

1. பிரிக்ஸ் நாடுகளின் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ள ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புடின் அழைப்பை ஏற்று பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று ரஷ்யா செல்கிறார்.

2. காவல்துறையில் வீரமரணம் அடைந்த காவலர்களை நினைவுகூறும் நிகழ்ச்சி இன்று நடைபெறுகிறது. மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தேசிய காவலர் நினைவகத்தில் இன்னும் சற்றுநேரத்தில் மரியாதை செலுத்துகிறார்.

3. ஜம்மு-கஷ்மீர் சட்டப்பேரவைக்கு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்கள் இன்று பதவியேற்றுக்கொள்கின்றனர்.

4. தொழிலாளர் வருங்கால வைப்பு நிதியில் கடந்த ஆகஸ்ட் மாதம் வரை 18 லட்சத்து 53 ஆயிரம் பேர் சேர்க்கப்பட்டுள்ளனர்.

5. கஜகஸ்தானில் நடைபெற்ற அல்மாட்டி ஓபன் டென்னிஸ் இறுதிப் போட்டியில் இந்தியாவின் அர்ஜுன் கதே – ரித்விக் போலிபாலி இணை சாம்பியன் பட்டத்தை வென்றது.

<<<<>>>>

பிரிக்ஸ் நாடுகளின் 16வது உச்சிமாநாட்டில் கலந்துகொள்வதற்காக பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று ரஷ்யாவிற்கு புறப்பட்டுச் செல்கிறார்.

இந்தக் கூட்டம் ரஷ்யாவின் **Kazan-**ல் நாளை தொடங்கி இரண்டு நாட்கள் நடைபெறுகிறது.

இந்தக் கூட்டத்தில் பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென் ஆப்பிரிக்க நாடுகளின் தலைவர்கள் கலந்துகொள்கின்றனர்.

முதல் முறையாக விரிவாக்கப்பட்ட இந்த கூட்டத்தில் எகிப்து, ஈரான், எத்தியோப்பியா, ஐக்கியர அரபு அமீரக நாடுகளின் தலைவர்கள் கலந்துகொள்கின்றனர்.

பிரிக்ஸ் நாடுகளின் கூட்டமைப்பிற்கு தலைமை வகிக்கும் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினின் அழைப்பின்பேரில் பிரதமர் திரு. நரேந்திர மோடி அங்கு செல்வதாக வெளியுறவுத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக நாடுகளின் வளர்ச்சி, பாதுகாப்பு உள்ளிட்ட முக்கியப் பிரச்சினைகள் இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்படுகின்றன.

மேலும் பிரிக்ஸ் நாடுகளின் எதிர்கால வளர்ச்சிக்கான ஒத்துழைப்பு குறித்தும் விவாதிக்கப்படுகிறது.

பிரிக்ஸ் நாடுகளுடனான உச்சிமாநாட்டுடன் ஆசியா, ஆப்பிரிக்கா, மத்திய கிழக்கு நாடுகள், லத்தீன் அமெரிக்க நாடுகள் உடனான கூட்டமும் நடைபெறுகிறது.

'உலகின் எதிர்காலத்தை கட்டமைப்போம்' என்ற கருப்பொருளில் இந்தக் கூட்டம் நடைபெறுகிறது.

<<<<>>>>

ஜம்மு-கஷ்மீர் சட்டப்பேரவைக்கு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்கள் இன்று பதவியேற்றுக்கொள்கின்றனர்.

சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு தற்காலிக சபாநாயகர் திரு. முபாரக் குல் பதவிப்பிரமாணம் செய்து வைக்கிறார்.

முதல் முறையாக சட்டப்பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 51 பேருக்கும் அவர் பதவிப்பிரமாணம் செய்து வைக்கிறார்.

இந்த நிகழ்ச்சி இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறுகிறது.

பிஜேபியின் 29 வயதுடைய இளம் சட்டப்பேரவை உறுப்பினரான திரு. **Shagun Parihar** முதல் தேசிய மாநாட்டுக் கட்சியின் 80 வயதுடைய திரு. அப்துல் ரஹீம் ரத்தர் ஆகியோர் இன்று சட்டப்பேரவை உறுப்பினர்களாக பதவியேற்றுக்கொள்கின்றனர்.

அக்கட்சியைச் சேர்ந்த மற்றொரு உப்பினரான அலி அகமது சாகர் தொடர்ச்சியாக ஏழாவது முறையாக சட்டப்பேரவை உறுப்பினராக பதவியேற்றுக்கொள்கிறார்.

<<<<>>>>

ஜம்மு-கஷ்மீரில் கந்தர்பால் மாவட்டத்தில் ககன்கீர் என்ற இடத்தில் உள்ள தனியார் நிறுவனத்தின் தொழிலாளர் முகாமில் புகுந்து தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதில் 6 தொழிலாளர்கள் உயிரிழந்தனர்.

இந்த தாக்குதலில் காயமடைந்த தொழிலாளர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ககன்கீர் பகுதியின் சோனா மார்க் வரை அமைக்கப்பட்டு வரும் சுரங்கப்பாதையில் இந்த தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

தொழிலாளர்கள் மீது நடத்தப்பட்ட இந்த தாக்குதல் மிகவும் கோழைத்தனமானது என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

இந்த தாக்குதலில் ஈடுபட்ட தீவிரவாதிகள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று சமூக வலைதளப் பதிவில் தெரிவித்துள்ளார்.

உயிரிழந்த தொழிலாளர்களின் குடும்பத்தினருக்கு அவர் ஆறுதல் தெரிவித்துள்ளார்.

மத்திய சாலை மற்றும் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரியும் இந்தத் தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதியில் கடந்த ஆகஸ்ட் மாதம் வரை 18 லட்சத்து 53 ஆயிரம் பேர் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பாக, மத்திய தொழிலாளர் நல அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், 9 லட்சத்து 30 ஆயிரம் புதிய உறுப்பினர்கள் ஆகஸ்ட் மாதத்தில் சேர்க்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் இரண்டு லட்சத்து 53 ஆயிரம் பேர் பெண் தொழிலாளர்கள் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர்.

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி அமைப்பில் உறுப்பினர்களின் சேர்க்கை ஒவ்வொரு மாதமும் கணிசமாக அதிகரித்து வருவது புதிய வேலைவாய்ப்புகள் அதிகரித்துள்ளதை காட்டுவதாகவும் தொழிலாளர் நல அமைச்சகம் கூறியுள்ளது.

தொழிலாளர்கள் இடையே தங்களுக்கான நலத்திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு அதிகரித்துள்ளதாக கூறியுள்ள அமைச்சகம், 2023-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கையைவிட இந்த ஆண்டு 9 சதவீதம் பேர் கூடுதலாக தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி அமைப்பில் பதிவு செய்திருப்பதாகவும், தெரிவித்துள்ளது.

<<<<>>>>

இந்திய கப்பற்படை மற்றும் ஓமன் ராயல் கடற்படை இணைந்த கூட்டுப் பயிற்சி கோவா கடற்கரை அருகே கடந்த 6 நாட்கள் நடைபெற்றது.

இரண்டு கட்டங்களாக நடைபெற்ற இந்தப் பயிற்சியில் துப்பாக்கி சுடுதல், ஹெலிகாப்டர் பயிற்சிகள் போன்றவை நடைபெற்றன.

இதில் இந்திய கப்பற்படையின் சார்பில் ஐ.என்.எஸ். திரிகண்ட் மற்றும் டோர்னியர் விமானங்கள் ஈடுபடுத்தப்பட்டன.

ஓமன் ராயல் கடற்படையின் சார்பில் அல்சீப் கப்பல் பயிற்சியில் ஈடுபட்டது.

இந்தப் பயிற்சியின் மூலம் இரு நாடுகளுக்கிடையே ஒத்துழைப்பு அதிகரித்துள்ளதாக இந்திய கப்பற்படை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

சிறு நகரங்களை இணைக்கும் விதத்தில் தொடங்கப்பட்ட உடான் விமான சேவையின் 8ஆம் ஆண்டு இன்று கொண்டாடப்படுகிறது.

இந்தத் திட்டம் 2016ஆம் ஆண்டு ஆகஸ்ட் 21ஆம் தேதி மத்திய சிவில் விமானப் போக்குவரத்துத்துறை சார்பில் தொடங்கப்பட்டது.

இந்தத் திட்டத்தின் மூலம் பெருமளவிலான மக்கள் பயனடைந்து வருவதாக விமானப் போக்குவரத்துத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதுவரை 600 வழித்தடங்களில் சேவைகள் வழங்கப்பட்டு வருவதாகவும், ஒரு கோடியே 40 லட்சம் பயணிகள் விமானங்களில் பயணித்துள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

34 மாநிலங்கள் மற்றும் யூனியன்பிரதேசங்களில் இந்தத் திட்டம் அமலில் உள்ளது.

இந்தத் திட்டத்தின் மூலம் இந்தியாவின் சுற்றுலாத்துறை வளர்ச்சியடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

இந்தியாவின் மின்னணு பணப் பரிவர்த்தனை சேவையான **UPI**-யை மாலத்தீவில் அறிமுகப்படுத்துவதற்கு அந்நாட்டு அதிபர் டாக்டர் முகமது மொய்சு முடிவு செய்துள்ளார்.

அந்நாட்டின் கேபினட் அமைச்சர்கள் அளவிலான கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாகவும் இதன் மூலம் மாலத்தீவின் பொருளாதாரம் பயனடையும் என்றும் மின்னணு கட்டமைப்பு மேலும் வலுப்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாலத்தீவுக்கு வரும் இந்திய சுற்றுலாப் பயணிகள் இதன் மூலம் பெருமளவில் பயனடைவர் என்றும் கூறப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கடந்த ஆகஸ்ட் மாதம் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் மாலத்தீவு சென்றபோது **UPI** பயன்பாட்டை அறிமுகப்படுத்துவது குறித்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்.

இந்தத் திட்டம் ஏற்கனவே ஐக்கிய அரபு அமீரகம், இலங்கை, பிரான்ஸ், மலேசியா, சிங்கப்பூர், நேபாள், இங்கிலாந்து மற்றும் மொரீஷியஸ் ஆகிய நாடுகளில் பயன்படுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

<<<<>>>>

நில அளவையில் புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதற்கான சர்வதேச பயிற்சி முகாமை மத்திய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் இன்று புதுதில்லியில் தொடங்கி வைக்கிறார்.

நகர்ப்புற மற்றும் கிராமப்புற பகுதிகளில் நில அளவை தொடர்பான புதிய தொழில்நுட்பங்களை எப்படி பயன்படுத்துவது மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் இந்தத் தொழில்நுட்பத்தைக் கொண்டு மாதிரி திட்டத்தினை அறிமுகப்படுத்துவது ஆகியவை குறித்து விவாதிக்கப்படுகிறது.

மேலும் நில அளவை தொடர்பான வரைமுறைகள், தரவுகளின் பாதுகாப்பு ஆகியவை குறித்தும் விவாதிக்கப்படுகிறது.

மத்திய அரசின் பல்வேறு துறைசார்ந்த அதிகாரிகள், மாநிலங்களின் வருவாய் மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் செயலாளர்கள், சர்வதேச நிபுணர்கள், தொழில்நுட்ப அறிஞர்கள் ஆகியோர் இந்த 2 நாள் பயிற்சி முகாமில் கலந்துகொள்கின்றனர்.

<<<<>>>>

கஜகஸ்தானில் நேற்று நடைபெற்ற அல்மாட்டி ஓபன் டென்னிஸ் இறுதிப் போட்டியில் இந்தியாவின் அர்ஜுன் கதே – ரித்விக் போலிபாலி இணை சாம்பியன் பட்டத்தை வென்றது.

இந்த இணை கொலம்பியாவின் **Nicolas Barrientos** – துனீஷியாவின் **Skander Mansouri** இணையை சூப்பர் டை பிரேக்கரில் வென்றது.

-------------

உலகக்கோப்பை மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் இறுதிப் போட்டியில் நியூசிலாந்து அணி சாம்பியன் பட்டம் வென்றது.

துபாயில் நேற்று நடைபெற்ற தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான ஆட்டத்தில் 32 ரன் வித்தியாசத்தில் நியூசிலாந்து அணி வெற்றி பெற்றது.

டாஸ் வென்ற தென்னாப்பிரிக்க அணி முதலில் பந்துவீச தீர்மானித்தது.

அதன்படி முதலில் விளையாடிய நியூசிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 158 ரன் எடுத்தது.

பின்னர் களமிறங்கிய தென்னாப்பிரிக்க அணி 9 விக்கெட்டுகளை இழந்து 126 ரன் மட்டுமே எடுத்தது.

இந்தப் போட்டியில் 3 விக்கெட்டுகளை வீழ்த்திய நியூசிலாந்து அணியின் **Amelia Kerr** ஆட்ட நாயகியாகவும், தொடர் நாயகியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

------------

பனாஜியில் நடைபெற்ற தேசிய மாற்றுத்திறனாளிகளுக்கான பாரா நீச்சல் போட்டியில் ராஜஸ்தான் மாநிலத்தின் லக்கன்சிங் **S4-**100 மீட்டர் ஃப்ரீ ஸ்டைல் பிரிவில் தங்கப்பதக்கம் வென்றார்.

ஒடிசா மாநிலத்தின் கமல்கந்த் வெள்ளிப் பதக்கம் வென்றார்.

ஹரியானாவின் பல்ராஜ் வெண்கலப்ப பதக்கத்தைக் கைப்பற்றினார்.

**<<<<The End>>>>**